செ.வெ.எண் : 37

நாள்: 19-07-2017

கோ-ஆப்டெக்ஸ்

<u>பத்திரிக்கைக் குறிப்பு</u>

தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் கடந்த 82ஆண்டுகளாக தமிழக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து இந்தியா முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து நெசவாளர்களுக்கு பேருதவி புரிந்து வருகிறது.

காலத்திற்கேற்ற வகையில் புதிய உத்திகளைக் கையாண்டு பல புதிய வடிவமைப்புகளில் கோ-ஆப்டெக்ஸ் சேலைகள் மற்றும் இதர இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப **“ஆடி அதிர்ஷ்டம்”** என்ற பெயரில் இந்த ஆண்டும் **“இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்”** சிறப்பு விற்பனைத் திட்டத்தை **17.07.2017** முதல் துவங்க உள்ளது. இத்திட்டம் கைக்குட்டை முதல் பட்டுபுடவை வரை அனைத்து இரகங்களுக்கும் பொருந்தும். வாடிக்கையாளர்கள் இரண்டு வாங்கினால் கூடுதலாக ஒன்று இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் **வாடிக்கையாளர் வாங்கும் இரண்டாவது இரகத்திற்குரிய விலைக்குள் அவர்கள் விரும்பும் வேறு எந்த இரகங்களையும் இலவசமாக** பெற்றுக்கொள்ளலாம். இச்சிறப்பு விற்பனை **17.07.2017** முதல் **13.08.2017** வரை நடைபெறும்.

இந்த சிறப்பு விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய மென்பட்டு புடவைகள், காஞ்சிபுரம், ஆரணி, தஞ்சை போன்ற ஊர்களில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புடவைகள் கோவை கோரா காட்டன் சேலைகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பருத்தி சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேட்டி, லுங்கி., துண்டு வகைகள் பருத்தி சட்டைகள், ஸ்லப் சட்டைகள் மற்றும் ஏற்றுமதி இரகங்கள் ஏராளமாகத் தருவிக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் ஊட்டி மலையரசி விற்பனை நிலையத்தில் “இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்” சிறப்பு விற்பனையை **19.07.2017** அன்று காலை **10.00** மணியளவில் **நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.** அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்கள்.

கடந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் கோவை மண்டலத்தில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் ரூ.182.35 இலட்சங்கள் விற்பனை செய்யப்பட்டது, தற்போது ரூ.250.00 இலட்சங்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் ஊட்டி மலையரசி விற்பனை நிலையத்தில் கடந்த ஆண்டு **“இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்”** சிறப்பு விற்பனை திட்டத்தின் கீழ் ரூ.4.94 இலட்சங்கள் விற்பனை செய்யப்பட்டது, தற்போது ரூ.8.00 இலட்சங்கள் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் திரு R.நடராஜன், திரு.R.மோகன்குமார்,துணை மண்டல மேலாளர்(தணிக்கை), ஆகியோர் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை கோ-ஆப்டெக்ஸ் ஊட்டி மலையரசி விற்பனை நிலைய பொறுப்பாளர் திரு,Z.சபீனாநாஸ் சிறப்பாக செய்திருந்தார்.